# சுதந்திர இலங்கையில் தமிழ் மக்களின் கல்வி வளர்ச்சி



கலாநிதி. சபா. ஜெயராசா

# சுதந்திர இலங்கையின்
# தமிழ் மக்களின் கல்வி வளர்ச்சி

கலாநிதி சபா. ஜெயராஜா

அபிவிருத்தி நிறுவன வெளியீடு

அமரர், பேராசிரியர் ப. சந்திரசேகரம்
அவர்களின்
ஓராண்டு நினைவைக் குறிக்கும்
ஓர் அஞ்சலி மலராக
இந்நூல் சமர்ப்பிக்கப்படுகின்றது.

# அறிமுக உரை

சுதந்திர இலங்கையின் கல்வி வளர்ச்சியில் பிரித்து இனங்காணக்கூடிய போக்குகள் பலவற்றைக் காணமுடியும். அவற்றின் அழுத்தமே எமது கல்வி வரலாற்றின் பாதையை நெறிப்படுத்தியது. அதன் விளைவுகளை நாம் இன்றும் அனுப வித்து வருகின்றோம்.

கலாநிதி சபா. ஜெயராசாவின் "சுதந்திர இலங்கையில் தமிழ் மக்களின் கல்வி வளர்ச்சி" என்னும் இந் நூல் இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர், நாட்டில் ஏற்பட்ட கல்வி வளர்ச்சி தமிழ் மக்கள் மத்தியில் என்ன வகையில் செறிந்தது என்பதைக் காட்டமுற்படுகின்றது. குடியேற்ற வாதம், தேசியவாதம் என்ற காரணிகளின் தாக்கம் தமிழ் மக்களின் கல்வியில் ஏற்படுத்திய விளைவுகளை ஆசிரியர் காட்டியுள்ளார். ஆசிரியரின் இம் முயற்சியையும் அவர் கையாண்டுள்ள அணுகுமுறையினையும் பாராட்டுகிறேன்.

விடயப் பரப்பு விரிந்த ஒன்முக இருப்பினும், அதனை ஒரு குறிப்பிட்ட கோணத்தில் மட்டும் பார்க்க ஆசிரியர் முனைந்துள்ளார். அதன்மூலம் நூலின் அளவினைக் கட்டுப் படுத்தமுடிந்துள்ளது. இந்நூல் அளவில் சிறிதாயிருப்பினும் படிப்போரைச் சிந்திக்க வைக்கும் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை.

**வ. ஆறுமுகம்**
கல்வியற்றுறைத் தலைவர்.

கல்வியற்றுறை,
யாழ். பல்கலைக்கழகம்
27 - 07 - 1988

# வெளியீட்டாளர் உரை

எமது நிறுவனம் வெளியிடும் இரண்டாவது கல்வித்துறை சார்ந்த நூல் இதுவாகும். அத்துடன் விரிவுரையாளர் கலாநிதி சபா. ஜெயராஜா அவர்களின் எமது இரண்டாவது வெளியீடாகவும் இது இருப்பது திருப்தியளிக்கிறது. கல்வித்துறை தொடர்பான சமகால அறிவுத் தேவையை ஓரளவு நிறைவு செய்வதுபோல் இந் நூல் அமைகிறது. எதிர்காலத்தில் இது பெரிய நூலாகி விரிவுபடமுடியும்.

இந் நூலை எழுதித்தந்த விரிவுரையாளர் அவர்களுக்கும், இதன் முன் அட்டைப்படத்தை வரைந்த சங்கர் அவர்களுக்கும் அழகுற அச்சிட உதவிய ஸ்ரீ லக்ஷ்மி அச்சகத்திருக்கும் எந் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மா. சின்னத்தம்பி**
*இயக்குனர்*
*அபிவிருத்தி நிறுவனம்:*

*கொக்குவில்*
*1-10-1988*

| | | |
|---|---|---|
| **Title** | : | Suthanthira Ilankaiyel Tamil Makkalin Kalvi Valarchi. |
| **Author** | : | Dr. S- Jayarasah. |
| **Address** | : | Dept. of Education, University of Jaffna. |
| **Edition** | : | First 1988. |
| **Copy right** | : | Author |
| **Cover Design** | : | Lanka and M. Sinnathamby. |
| **Publishers** | : | Apiviruthi Niruvanam, Jaffna. |
| **Price** | : | Rs. 15-00 |
| **Subject** | : | Educational Development of the Tamils Since Independence. |
| **Printer** | : | Sri Luxmi Press. |

## சுதந்திர இலங்கையில்

# தமிழ் மக்களின் கல்வி வளர்ச்சி

கல்வி என்பது தொடர்ச்சி, கல்வியும் ஆசியலும் பண்பாடும் ஒன்றுக்கொன்று அனுசரணையான தொடர்புகளைக் கொண்டுள்ளன. அவை குறித்த சமூக பொருளாதாரக் கட்டமைப்புக்குரிய செல்வத்தின் ஆக்கத்தைப் புலப்படுத்தி நிற்கும். சமூகப் பயனும் உற்பத்தித் திறனும் கல்வியால் மேம்பட்டுச் செல்லும்.

எவ்வாறான சமூக பொருளாதார நிலைமைகளிலும் எதிர்கால வளர்ச்சியை நிர்ணயிக்கக் கூடிய பல்வேறு பண்புக்கூறுகள் காணப்படும். அவற்றுள் எத்தகைய பண்புகள் வலுவும் மேலாதிக்கமும் பெறும் என்பது சமூக முரண்பாடுகளின் பலத்தையும் மக்களின் நடவடிக்கைகளையும் பொறுத்ததாக விளங்கும். இந்நிலையில் மக்களின் நடவடிக்கைகளோடிணைந்த கல்வியென்பது ஒருவருக்குரிய சொந்தத் தெரிவாக மட்டுமன்றி, சமுதாயத்தின் பிரச்சினையாகவும் முன்னெடுக்கப்படுகின்றது.

கல்வி இருபக்கச் செயல் விளைவுகளைக் கொண்டது. ஒன்று நேர் விளைவு, மற்றையது எதிர்விளைவு.

எத்தகைய சமூக பொருளாதார அமைப்பு கல்விச் செயல்முறைகளை உருவாக்குகின்றதோ அந்த அமைப்பை நிலைநிறுத்தவும் பலப்படுத்தவும் ஒரு புறம் கல்வி பயன்படுகின்றது. மறுபுறம் சமூக அநீதிகளை நியாயப்படுத்தும் ஓர் அமைப்பின் திட்டங்களிலே கல்வி முறை ஒன்றிணைக்கப்படும்பொழுது, கொடுமைசூர் அமைப்பினை முறியடிப்பதற்குரிய விசைகளுடன் கல்வியாற்றல் இணைந்து கொள்கின்றது. கல்வி வளர்ச்சி பற்றி நோக்கும்போது இந்த அடிப்படைக் கருத்துக்களை முதற்கண் தமர்ப்பணம் செய்ய வேண்டியுள்ளது.

## குடியேற்ற வாதப்பின்னணியும் கல்வி விரிவாக்கமும்

நமது நவீன கல்வியின் வேர்கள் குடியேற்ற வாத ஆட்சி முறைமையுடன் தொடர்பு கொண்டுள்ளன. பிரித்தானியர் இலங்கையில் நிலை நிறுத்திய கல்வி முறைமை பற்றி ஆராய்ந்தோர் அதன் உள்ளடக்கப் பண்பினைப் பின் வருமாறு சுட்டிக் காட்டியுள்ளனர்.1

(அ) அரசுடன் திருச்சபை முகவர்கள் கல்விச் செயற்பாடுகளிலே ஒன்றிணைந்து பங்குபற்றினர்.

(ஆ) கல்வி முறைமை மத்திய கட்டுப்பாட்டைக் கொண்டு விளங்கியதுடன், பிரித்தானிய ஆளணியினரே தீர்மானங்கள் மேற்கொள்வோராய்ச் செயற்பட்டனர்.

(இ) ஆங்கில மொழியிலே செயலாற்றக் கூடிய உள்ளூர் நிருவாகிகளை வளர்த்தெடுத்தலும் புதிய பண்பாட்டுக்குரிய உயர்ந்தோர் குழாத்தினரை உருவாக்குதலும் கல்வியின் செயல் இலக்குகளாக விளங்கின.

(ஈ) கல்விச் செயற்பாடுகள் பிரித்தானிய பொருளாதார முறைமைக்கு பொருந்தி இசைவு செயக் கூடியதாக இயக்கப் பெற்றன.

மேற்கூறிய கல்விச் செயற்பாடுகள் பிரித்தானிய மேலாதிக்கத்தைக் கட்டியெழுப்பும் உபாயங்களாகவே விளங்கின.

குடியேற்ற வாதப் பண்புகளுடன் இணைந்ததாகவும், சில வழிகளில் முரண்பட்டதாகவும் இலங்கையின் கல்வி விரிவாக்க நடவடிக்கைகள் தொடர்ந்து இடம்பெறலாயின.

அனைத்து வயது வந்தோர் வாக்குரிமை, இந்திய சுதந்திரப் போராட்டத்தின் எழுச்சி, சமய மறுமலர்ச்சி, சோச

விசக் கோட்பாடுகளின் பரவல் முதலியவை இந்நாட்டின் பொதுக் கல்வி விரிவாக்க நடவடிக்கைகளைத் தூண்டின. 1944 ஆம் ஆண்டில் அரசாங்க சபை மேற்கொண்ட இலவசக் கல்வி தொடர்பான நடவடிக்கைகளுட் பின்வரும் இரு பண்புகள் சிறப்பிடம் பெறுகின்றன.2

(அ) உதவி பெறும் பாடசாலைகளிலும், அரசாங்கப் பாடசாலைகளிலும் தொழில் நுட்ப விவசாயக் கல்லூரிகளிலும் மாணவரிடம் கட்டணமும் அறவிடப்படலாகாது.

(ஆ) உதவி பெறும் பாடசாலைகளிலும், பயிற்சிக் கல்லூரிகளிலும் உள்ள தகுதியான ஆசிரியர்களுக்குரிய முழுச் சம்பளமும் பொது நிதியிலிருந்து கொடுக்கப்படலாம்.

மேற்கூறிய செயலாக்கங்கள், இலவசக் கல்வியை இந்நாட்டிலே கட்டியெழுப்புவதற்கு உறுதுணையாக விளங்கின. ஆயினும் அவை இலங்கையின் பாடசாலைக் கலைத்திட்டத்திலும் கல்வி முறைமையிலும் அடிப்படை மாற்றங்களை ஏற்படுத்தாது, ஏற்கனவே இருந்த அமைப்பியலைப் பலப்படுத்தவே துணைசெய்தன.

அரசு வழங்கிய நிதி வசதிகளைப் பயன்படுத்தித் தனியார் நிறுவனங்கள் தமக்குரிய பாடசாலை அமைப்புக்களை வளர்க்கத் தொடங்கின. அதேவேளை அரசாங்கம் முயன்று மேற்கொண்ட 'மத்திய வித்தியாலயம்' என்ற ஒழுங்கமைப்பு, கிராமப்புறக் கல்வி விரிவாக்கத்தை மேலும் விசைப்படுத்தியது.

இலங்கையின் கல்வி விரிவாக்கத்துக்குரிய காரணிகளுள், தேசிய மொழிகள் கல்வி மொழியாக்கப் பெற்றமை, முதன்மை நடவடிக்கையாக விளங்கிற்று.

ஒன்றரை நூற்றுண்டுக் காலப் பிரித்தானியராட்சியும் அந்த ஆட்சியின் சமூக பொருளாதார விசைகளும் இந்

நாட்டிற் பருமட்டாக ஏழு சத விதத்தினரை மாத்திரம் ஆங்கில மொழி அறிவுடையோராய் மாற்றுவதற்கு துணை செய்தது, அவர்களுள்ளும் அரைவாசியினரே ஆங்கில மொழியில் ஓரளவு தேர்ச்சியுடையோராயிருந்தனர்.[3]

தேசிய மொழிகள் பாடசாலைகளிலே விருத்தி செய்யப் பெற்றமை, வீட்டு மொழியாக ஆங்கிலத்தைக் கொள்ளாத நாட்டின் பெரும்பான்மையான பிள்ளைகளுக்குரிய கல்வி வாய்ப்புக்களை விரிவடையச் செய்தன. 1950ஆம் ஆண்டில் இலங்கையிலுள்ள நடுநிலைப் பாடசாலைகள் அனைத்திலும் இந்த விரிவாக்கம் ஓரளவு முழுமையடைந்தது.

கல்வி விரிவாக்கத்தை ஏற்படுத்திய பிறிதொரு விசையாக இலவச மதிய உணவுத் திட்டம் அமைந்தது. 1945ஆம் ஆண்டிலிருந்து இந்நாடு முழுவதையும் உள்ளடக்கிய இலவச மதிய உணவுத் திட்டம் பாடசாலைகளிலே ஆரம்பிக்கப்பட்டது. 1948ஆம் ஆண்டினைத் தொடர்ந்த இலங்கையின் ஆட்சிப் பொறுப்பேற்ற தேசிய உயர்ந்தோர் குழாத்தினர் ஒரு புறம், வர்க்கமுறை சார்ந்த அரசியலைக் கட்டியெழுப்பும் உபாயங்களை வளர்த்த வேளை, மறுபுறம் மக்கள் ஆதரவைப் பெறுவதற்கு இலவசக் கல்வியுடன் உணவு மானியத்தையும் தொடர்ந்து விரிவாக்கினர்.

இவ்வாறான செயலாக்கங்களின் ஒன்றிணைந்த விளைவுகளாற் கல்வித் துறையில் நிகழ்ந்த விரிவாக்கத்தைப் பின்வரும் புள்ளி விபரங்கள் தெளிவாகக் காட்டுகின்றன.[4]

| ஆண்டு | பாடசாலைகளின் எண்ணிக்கை | ஆசிரியர்களின் எண்ணிக்கை | மாணவரின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1931 | 5304 | 18, 242 | 553, 701 |
| 1947 | 5915 | 28, 210 | 1, 025, 836 |
| 1953 | 6480 | 43, 335 | 1, 564, 848 |
| 1963 | 9100 | 81, 211 | 2, 460, 694 |
| 1970 | 9646 | 94, 583 | 2, 550, 150 |
| 1975 | 9675 | 99, 067 | 2, 543, 600 |

இந்த விரிவாக்கம் கல்வி வழங்கலிற் காணப்பெற்ற ஆண் பெண் வேறுபாடுகளைச் சுருக்கியதுடன், கிராம–நகர இடைவெளியையும் ஒடுக்கியது.

மேற்கூறிய விரிவாக்கங்களிடையே தேசிய வாதத்தி னுடைய பிறிதொரு பண்பு முனைப்புக் கொண்டெழுந்தமை விரிவாக நோக்கப்பட வேண்டியுள்ளது.

## கல்வி விரிவாக்கமும் தமிழ் மக்களும்

இலங்கையின் பொருளாதாரம் பிரித்தானிய குடி யேற்ற வாத முறைமைகளிலிருந்து அதிகம் விடுபடாத நிலையில், கல்வித் துறையில் நிகழ்ந்த விரிவாக்கம் வரை யறுக்கப்பட்ட தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ள வேண்டிய போட்டியில் மேலும் மேலும் அமுக்கங்களை ஏற்படுத்தின. பல இனக் குழுக்களும் தொழிற் போட்டி யிலே தீவிரமாகப் பங்கேற்கத் தொடங்கின.

மேற்கூறிய பகைப்புலத்திலே உத்தியோகப் பற்றற்ற பௌத்த குழுவின் விசாரணை அறிக்கையில் கூறப்பெற்ற பின்வரும் கருத்துக்கள்,5 பௌத்த சிங்கள மக்கள் மத்தி யிலே செல்வாக்கைச் செலுத்தின. அரசாங்க உயர் பதவி களிலே பௌத்த சிங்களவர்களே நியமனம்பெற வேண்டு மென்றும், பல்கலைக்கழகங்களுக்கும், பொதுச் சேவைகளுக் ளுக்கும் உரிய நுழைவு, சமய, இனத்துவ விகிதாசார அடைப்படையில் அமையவேண்டு மெனவும் அறிக்கையிலே முன்மொழியப்பெற்றன.

குடியேற்ற வாதக் கல்வி முறையில் எதிர் விளைவுகளை அனுபவித்த சிங்கள மக்கள் அவற்றுக்குரிய மீட்சியைத் தேசியக் கல்விக் கொள்கைகள் வாயிலாகத் தீர்க்க முயன்ற வேளை பிரச்சினையின் வேர்களை நோக்கி, அடிப்படைப் பொருளாதார மாற்றங்களை விசைப்படுத்தும் உபாயங்களை மொழியாமை குறித்துரைக்கப்பட வேண்டிய ஒரு பிர தான நிகழ்ச்சியாகும். பின்னர் முளை கொண்ட பல்வேறு

பிரச்சினைகளுடன் அந்நிகழ்ச்சி தொடர்புபட்டு நின்றது. இச்சந்தர்ப்பத்தில் உத்தியோக நிலைமைகளைப் பொறுத்த வரை தமிழ் மக்கள் மீது சுமத்தப்பெற்ற தவறான விழுமியங்களைச் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

அரச உயர் உத்தியோகங்களில் ஆங்கிலத்தை வீட்டு மொழியாகக் கொண்டிருந்தோரே பெருமளவில் இடம் பெற்றனர். சிறப்பாக பறங்கிய சமூகத்தினரும் வசதிகளைக் கொண்ட தமிழர்களும், சிங்களவர்களுமே, உயர் உத்தியோக வாய்ப்புக்களை அனுபவித்தனர். அந் நிலையில் தமிழர்கள் மட்டுமே உயர் உத்தியோகங்களில் அதிகமாயிருந்தனர் என்ற கூற்று மெய்ப்பிக்கக் கூடியதன்று.

சராசரியான யாழ்ப்பாணத் தமிழர்கள் ஓரளவு ஆங்கிலக் கல்வியைப் பெற்று எழுதுவினைஞர் தரத்து உத்தியோகங்கள் பெறுவதில் நாட்டங் கொண்டனர். யாழ்ப்பாணத்துப் பிழைப்பூதிய பொருளாதார நடவடிக்கைகளோடு ஒப்பிடும் பொழுது எழுதுவினைஞர் தரத்து உத்தியோகங்கள் கவர்ச்சியுடையனவாய் விளங்கின.

யாழ்ப்பாணப் பாடசாலைகளிலே ஆசிரியர்களாகப் பணி புரிவதற்கு இந்தியாவிலிருந்து பட்டதாரி ஆசிரியர்கள் வந்திருந்தமை உயர் கல்வியில் யாழ்ப்பாணப் பிரதேசம் மேற்கொண்ட ஊக்கத்தை எடுத்துக் காட்டுகின்றது.

இடைநிலைக் கல்வி நன்கு ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தமையால், யாழ்ப்பாணத்துப் படித்த வாலிபர்கள் எழுதுவினைஞர் தரத்து உத்தியோகங்கள் பெறும் சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன. ஆயினும் அதனை ஒரு நிரந்தரமான தோற்றப்பாடாகக் கொள்ள முடியாதிருந்தது.

1953 ஆம் ஆண்டுக்குப் பின் இனக் குழுக்களுக்குரிய தொழில் வாய்ப்புக்களை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, ஏனைய இனக் குழுக்கள் கூடிய வாய்ப்புக்களை அனுபவிக்கத் தொடங்கியவேளை தமிழர்களுக்குரிய தொழில் வாய்ப்புக் வீழ்ச்சியுறத் தொடங்கின.6

அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், பல்க லைக்கழகங்கள், வங்கிகள், ஆராய்ச்சி நிறுவனங்கள் ஆகிய வற்றிலே தொழில் பெறுதல் கல்வி கற்றோரது இலட்சிய மாகவும் ஆவலுடன் கூடிய எதிர்ப்பார்ப்பாகவும் விளங்கு கின்ற நிலையிலே, தமிழ் மக்களுக்கு நேர்ந்த இந்தத் தாக்கம் தொழில் வாய்ப்புத் தொடர்பான ஒரு நெருக்கடியாக மட்டும் விளங்காது, சமூக நெருக்கடியாகவும், உளவியல் நெருக்கடிளாகவும் உருவெடுத்தது.

இந்நிலையில் 1960ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப் பெற்ற பாடசாலைகளையும், ஆசிரியர் கல்லூரிகளையும் அரசு பொறுப்பேற்ற நிகழ்ச்சி.7 கல்வியின் உள்ளடக்க மாற்ற மாக விளங்காது, பாடசாலைகளைக் கட்டுப்படுத்துதல் தொடர்பான மாற்றமாகவே பெருமளவில் விளங்கியது.

கத்தோலிக்க திருச்சபையினரும், கிறிஸ்தவ மிசனெறி யினரும் நடத்திய பல பாடசாலைகள் கல்விப் பணிப்பாள ரின் முகாமைத்துவத்தின் கீழ்க்கொண்டு வரப்பட்டமை, ஒரு வகையில் அவர்களின் தனித்துவத்தைக் கட்டுப்படுத் தியதென்று கூறினாலும் அக்கருத்தை முற்று முழுதாக அங்கீகரித்துவிட முடியாதுள்ளது. கட்டணம் அறவிடும் தனியார் பாடசாலைகளும், கட்டணம் அறவிடாத தனி யார் பாடசாலைகளும் தொடர்ந்து இயங்குவதற்கு வாய்ப் பளிக்கப்பட்டன. இலங்கையின் பிரதான நகரங்களில் உள்ள புகழ்பூத்த முப்பத்தேழு கல்லூரிகள் இன்றும் தனி யார் அமைப்பில் இயங்கி வருதல் குறிப்பிடத்தக்கது.

பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்க முயன்றமை ஏற்கனவே தமிழ் மக்களிடத்து ஏற்பட்டிருந்த சமூக உள வியல் நெருக்கடிகளுக்கு மேலும் அழுத்தங் கொடுக்கலா யிற்று. வடக்கு கிழக்கு மாகாணங்களைத் தவிர்ந்த பிற மாகாணங்களில் அரசாங்கம் பொறுப்பேற்ற பாடசாலைக ளில் இயங்கிய தமிழ்ப் பிரிவுகள் அவ்வப்போது மூடப்பட்டு வந்தமையும், தமிழாசிரியர்கள் மத்தியிலே சிறப்புப்பெற்று

விளங்கிய திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலை, நல்லூர் ஆசிரியர் கலாசாலை, கொழும்புத்துறை ஆசிரியர் கலாசாலை ஆகியவை மூடப்பட்டமையும் கல்வி வாய்ப்பு, தொழில் வாய்ப்புத் தொடர்பான அச்சங்களுக்கு மேலும் வசையூட்டின.

அரசியற் கட்டுப்பாடுகள் படிப்படியாக வளர்ந்து சென்ற நிலையிற் கல்விப் பரவலில் சமத்துவமும், சம சந்தர்ப்பங்களும் விருத்தியடையாதிருந்தமை சுட்டிக்காட்டப்பட வேண்டியுள்ளது. கல்வியிற் சமூக ஏற்றத்தாழ்வுகள் தொடர்ந்தும் காணப் பெற்றன. 1966 ஆம் ஆண்டிற் செனேற் சபையில் வெளியிடப்பட்ட தகவலில். ஒவ்வொரு மாணவருக்குமுரிய ஆசிரிய நிதி ஒதுக்கீட்டிற் பாரிய வேறுபாடுகளிலிருந்தமை சுட்டிக்காட்டப் பெற்றது.[8]

<u>எடுத்துக்காட்டு வருமாறு:-</u>

| | |
|---|---|
| மகாவித்தியாலயம், தெறிப்பே | ரூ. 4-75 சதம் |
| மகளிர் உயர் கல்லூரி, கண்டி | ரூ. 16-01 சதம் |
| றோயல் கல்லூரி, கொழும்பு | ரூ. 24-85 சதம் |

பாடசாலைகள் தேசியமயமாக்கப்பட்ட பின்னரும் பொதுக் கல்வியின் அனுகூலங்கள் வாய்ப்புடையோருக்கே மீண்டும் மீண்டும் வாய்ப்புக்களை வளப்படுத்தின. இந்நிலையில், பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை ஆழ்ந்து நோக்கும் உணர்வுகளிலும் பார்க்க இனத்துவ வயப்பட்ட நோக்குகளே ஒப்பீட்டளவில் மேலோங்கிச் சென்றமையை நோக்க முடியும்.

பாடசாலைகள் தேசியமயமாக்கப்பட்டபொழுது, பெருந்தோட்டப் பாடசாலைகள் நழுவ விடப்பட்டமை, இனத்துவ வயப்பட்ட உணர்வுகளை ஒருவகையிலும், வர்க்க நிலைப்பட்ட நோக்கை இன்னொரு வகையிலும் பிரதிபலித்தன. சுமார் 600 தோட்டப் பாடசாலைகள் தேசிய கல்வித் திட்டத்தின் கீழ்க் கொண்டு வரப்படாத அவலநிலை காணப்பட்டது.

பரவலான சுரண்டலை உள்ளடக்கிய பெருந்தோட்டப் பொருளாதார முறைமையானது தரத்திலே வெகுவாகப் பின்தங்கிய கல்வி வழங்கல் அமைப்பைக் கொண்டு விளங்கியது. பெரும்பாலான தோட்டப் பாடசாலைகள் ஐந்தாம் வகுப்பு வரையிலான கல்வி ஒழுங்கமைப்பைக் கொண்டிருந்தன. பெரும்பாலும் ஓர் ஆசிரியரே அனைத்து வகுப்பு மாணவர்க்கும் ஒரே நேரத்திற் கற்பிக்க வேண்டிய இக்கட்டான நிலையும் காணப்பட்டது.

அரசாங்கப் பாடசாலைகளில் 25·6 மாணவர்க்கு ஓராசிரியர் என்ற நிலையும், தனியார் பாடசாலைகளில் 24·4 மாணவர்க்கு ஓராசிரியர் என்ற நிலையும். பெருந்தோட்டப் பாடசாலைகளில் 61·2 மாணவர்க்கு ஓராசிரியர் என்ற நிலையும் காணப்படல், 9தோட்டப் பாடசாலைகள் எத்தகைய வினைத்திறனைக் கொண்டு செயலாற்றுகின்றன என்பதைப் புலப்படுத்தும்.

பெருந்தோட்டப் பாடசாலைகளைத் தேசியமயமாக்க வேண்டும் என்ற கருத்தை முன்மொழிந்த 1962ஆம் ஆண்டின் தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கை மேலெழுந்தவாரியாகப் பார்க்கும் பெபாழுது முற்போக்கானதாகக் காணப்பட்டாலும். தோட்டங்களில் வாழும் தமிழ் மக்களை அவற்றின் அயற் பிரதேசங்களில் வாழும் சிங்கள மக்களுடன் ஒன்றிணைப்பதற்கு சிங்கள மொழியே கல்வி மொழியாக அமைக்கப்பட வேண்டுமென்றனர்.

கல்வியில் இனத்துவப் தொடர்பான பாரபட்ச நிலைகளை இந்த விதப்புரை புலப்படுத்தியது. பேராசிரியர் ஜே. ஈ. ஜயசூரியா போன்ற கல்விமான்கள் மேற்கூறிய கருத்தை வலியுறுத்தும் முகமாக முன்வைத்த வாதங்கள் விமர்சனத்துக்குரியன.10

பிரித்தானியா, அவுஸ்திரேலியா, ஐக்கிய அமெரிக்கா போன்ற நாடுகளிற் குடியேறியோர் ஆங்கிலத்தைத் தமக்குரிய கல்வி மொழியாகக் கொள்வதுபோல இலங்கையில் உள்ள இந்திய வம்சாவழியினரும் சிங்களத்தைப் போதனை மொழியாகக் கொள்ள வேண்டுமென்பதே பேராசிரியர்

ஜே. ஈ. ஜயசூரியா அவர்கள் முன்வைத்த வாதத்தின் உள்ளடக்கமாகும்.11 பெருந்தோட்டப் பொருளாதார நடவடிக்கைகள் காரணமாக இங்கு குடியேற்றம் செய்யப்பட்ட மக்களுக்கும். பிரித்தானிய. ஐக்கிய அமெரிக்காவிலே குடியேறிய மக்களுக்குமிடையே அவர் ஒப்புமைகாண முயன்றமை. இரு வேறுபட்ட சமூக பொருளாதார இயக்கங்களிடையே ஒப்புமைகாண முயன்ற உள்ளடக்கப் பலவீனத்தைப் புலப்படுத்துகின்றது. இங்குள்ள இந்திய வம்சாவழியினரது நிலை 'தேசிய இனம்' என்ற சிறப்பார்ந்த நிலைக்குரியதாக இருத்தலும் அவரது வாதத்திலே மனங்கொள்ளப்படவில்லை. பேராசிரியரது கருத்துக்கள் குறித்த தேவைக்கு உரியதாக முன்மொழியப் பெற்றிருந்தனவேயன்றி. மனிதாபிமானத்தையும், அடிப்படை உரிமையையும் அணுகி நிற்கவில்லை.

1970 ஆம் ஆண்டில் நிகழ்ந்த பொதுத்தேர்தல் கல்வி நடவடிக்கைகளைப் பொறுத்தவரை பொருண்மை கொண்டதாக விளங்கியது. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, லங்கா சமாசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவை ஒன்று கூடி இடதுசாரி ஐக்கிய முன்னணி என்ற ஓர் அமைப்பை உருவாக்கி, ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிரான ஓர் அணியாகத் திரண்டன. பாரம்பரியமான அணுகுமுறைகளைக் கைவிட்டு பொருளாதாரப் பிரச்சினைகளே அப்போதைய தேர்தலில் முன்னெடுக்கப்பட்டன.

தேர்தலில் வெற்றிபெற்ற இடதுசாரி ஐக்கிய முன்னணி தனது கொள்கைத் திட்டத்தில் முன்மொழிந்த பொருளாதார பிரச்சினைகளுக்குரிய தீர்வுகளை உடனடியாக வழங்க முடியாமலிருந்தது. விலைவாசிகள் உயர்ந்தன; படித்த இளைஞர்களினதும், பட்டதாரிகளினதும் எண்ணிக்கை தொழிற் சந்தையிலே அதிகரிக்கத் தொடங்கின, உதவி மானியங்களும் படிப்படியாகக் குறைக்கப்பட்டன. அவற்றின் பகைப்புலத்திலே 1971ஆம் ஆண்டின் நெருக்கடிகள் வளர்ச்சியுற்றன.13

மேற்கூறிய அனுபவங்களை அடியொற்றி இலங்கையின் கல்வியை ஆழ்ந்து விமர்சிக்கவும், பாடசாலைக் கலைத்திட்ட வடிவமைப்பினை மாற்றி அமைக்கவும் வேண்டிய தவிர்க்க முடியாத தேவைகள் அக்கால கட்டத்தில் எழுந்தன.

## 1972ஆம் ஆண்டின் கலைத்திட்ட மாற்றங்களும் தமிழ் மக்களும்

1972ஆம் ஆண்டில் அறிமுகம் செய்யப்பெற்ற கலைத்திட்ட மாற்றங்கள் பாரம்பரியமான கலைத்திட்ட அமைப்புக்களிருந்து பெருமளவிலே வேறுபாடு கொண்டிருந்தன. பாரம்பரியமான அமைப்பென்று கூறப்படும்பொழுது கலைத்திட்ட ஆக்கத்திலே செல்வாக்குச் செலுத்திய குடியேற்றவாதக் கல்வித் தொடர்புகளே சுட்டிக்காட்டப்படுகின்றன.

"சுதந்திரம் பெற்று இத்தனை காலமாகியும் நம் வேட்கைகளும், உளப்பாங்குகளும், மதிப்புக்களும், குடியேற்ற நாட்டுக் காலத்து நிலைமையைவிட அதிகம் வேறுபடாத தன்மையொடு தான் இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன."14 என்றவாறு கல்வியிற் பழைய மனோபாவங்கள் விளக்கப் பெற்றன.

புதிய கலைத்திட்டம் இடைநிலை மட்டத்தில் நிலவிவந்த கலை, விஞ்ஞானம் என்ற பாகுபாடுகளை ஒழித்தது: அனைத்து மாணவர்க்கும் கணிதம், விஞ்ஞானம் ஆகிய அனுபவங்களை வழங்கியது; ஒன்றிணைந்த முறையிலே சமூகக் கல்வி விஞ்ஞானம் முதலியவற்றைக் கற்கும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டது; கலை, விஞ்ஞானம், அழகியல், முன்தொழிற் கல்வி என்பவற்றிற்கிடையே சமநிலை பொதியும் முயற்சிகள் மேற்கொள்ளப் பெற்றன.

புதிய கலைத்திட்டத்தில் ஏற்படுத்தப்பட்ட, முன்தொழிற் பாடங்கள் மிக முக்கியமான இடத்தினைப் பெற்றன. "முன் தொழிற் படிப்புபயிற்றுவதன் நோக்கம் ஒரு வேலையைப் பழகிக் கொள்ளல் அன்று. எந்த வேலையிலும் பயன்படக் கூடிய அன்றாட வாழ்விலுமே பயன்படக்கூடிய திறமைகளைப் பயில்வதாகும்." 15

உடை நலுங்காத உத்தியோகங்களுக்குரிய ஆளணி யினரைத் தயாரிக்கும் இலட்சியத்தைக் கொண்ட பாரம் பரீயமான கலைத்திட்ட வடிவமைப்பு புதிய கொள்கை யாக்கத்திலே விமர்சிக்கப்பட்டது. முற்றிலும் ஏட்டுக்கல்வி ஒழுங்கமைப்புக்கு அழுத்தங் கொடுத்த முறைமை மாற்றி யமைக்கப்பட்டு முன் தொழிற்பாடங்களுக்குக் கூடிய முக் சியத்துவம் கொடுக்கப்பட்டது. மொத்தக் கலைத்திட்ட நேர ஒதுக்கீட்டில் 20% அளவு முன் தொழிற் பாடங்க ளுக்கு வழங்கப் பெற்றது.16

இலங்கையிலுள்ள விவசாயம், மீன்பிடி, வர்த்தகம் போன்ற பொதுவான தொழில்களில் மாணவர் முன் அனு பவத்தைப் பெறக் கூடிய வாய்ப்புடன், பாடசாலைச் சூழ லிலுள்ள சிறப்பார்ந்த தொழில்கள் பற்றிய முன் அனுப வங்களைப் பெறும் வாய்ப்புக்களும் ஒழுங்கு படுத்தப்பட்டன. முன் தொழில் பாடங்களுடன் இணைந்ததாக நாட்டின் வளங்களை அறிந்து கொள்ளவும், கேந்திர கணித பொறி முறை அனுபவங்களைப் பயிலவும் வாய்ப்பு ஏற்பட்டது.

சிரேட்ட இடைநிலைக்கல்விக்குரிய பத்தாம் பதினொ ராம் வகுப்புக்களில் கலை, விஞ்ஞானம் என்ற எந்தப் புலத் தைச் சேர்ந்த மாணவர்க்கும் சில அடிப்படையான பொது அனுபவங்களை வழங்க முயன்றமையும் குறிப்பிடக் கூடிய விருத்தி முயற்சியாகும். கல்வி மொழி, ஆங்கிலம், செய்திட்டம், முகாமைத்துவம், புள்ளிவிரவியல், சமதர்மக் கோட்பாடுகள், இலங்கையின் பண்பாட்டுப் பாரம்பரியம் முதலிய பாடங்கள் சிரேட்ட இடைநிலை மட்டத்தில் அனைத்து மாணவர்க்கும் ஒழுங்கு செய்யப்பட்டன. சமுகப் பங்குபற்றல், கூட்டுறவு, தொழில் மகத்துவம் போன்ற உணர்வுகளை மாணவர்களிடத்துக் கட்டியெழுப்ப இவை உதவின.

கலைத்திட்டத்தில் ஏற்படுத்தப்பட்ட புதிய மாற்றங்க ளுக்கு ஏற்றவாறு நாட்டின் பொருளுற்பத்தித் துறைகளிலே அடிப்படை மாற்றங்கள் நிகழ்த்தப்படாமையினால் கல்வி யுலகுக்கும் வேலையுலகுக்குமிடையே இடைவெளிகள் காணப்

பட்டன. தொடர்ந்தும் இலங்கைப் பொருளாதாரம் தங்கி யிருக்கும் பொருளாதாரமாகவே இயங்கி வந்தது.

ஆயினும் அரசாங்கம் மேற்கொண்ட இறக்குமதித் தடைகள் இறக்குமதிப் பிரதியீடுகளை உற்பத்தி செய்தல், என்ற பெருளாதார முயக்சிகளால் உள்ளூர் உணவுப் பொருள்கள், கைத்தொழில் பொருட்கள் என்பவற்றில் விலைகள் ஒப்பீட்டளவில் உயர்ந்தமை படித்த வாலிபர் கள் விவசாயத்திலும், மீன்பிடித்தலிலும், உள்ளூர் கைத் தொழில்களிலும் ஈடுபடும் மனப்பக்குவத்துக்கு உற்சாகம ளித்தது.

தேசிய இனங்கள் இக்காலத்திட்டத்தின் வாயிலாக எதிர் கொள்ள நேர்ந்த தாக்கங்களை அடுத்து நோக்குதல் வேண்டும். புதிய காலத்திட்ட மாற்றங்களை விளக்கிக் கல் வியமைச்சு வெளியிட்ட "கல்வியில் புதிய பாதை" என்னும் நூலிலே பின்வரும் கருத்துக்கள் குறிப்பிடப்பட் டுள்ளன. "சிறுபான்மை இனத்தினருக்குக் பெரும்பான்மை யோரின் மொழி கட்டாயமாகப் படிப்பிக்கப்படுகிறது. ஆனல் எந்த நாட்டிலும் சிறுபான்மையோரின் மொழி பெரும்பான்மைபோருக்குக் கட்டாயமாகப் படிப்பிக்கப்படு வதை நாம் அறியோம்" (பக். 16–17) இக்கருத்தினை மறுத்துரைத்த பேராசிரியர் ப. சந்திரசேகரம் அவர்கள் இவ்வாறு தவருன கருத்துக்களை முன்வைத்தல் தகாதென் றும் சுவிற்சலாந்திற் சிறுபான்மையினரின் மொழி பெரும் பான்மையினருக்குக் கட்டாயமாகக் கற்பிக்கப்படுகின்ற தென்றும் தெளிவு படுத்திரூர்.

மேலும் தமிழ்த் தேசிய இனத்தைச் 'சிறுபான்மை இனம்' என்று ஆவணங்களிலே குறிப்பிட்டமையும், உரிய கௌரவத்தை வழங்காத புறக்கணிப்பு என்பதை சுட்டிக் காட்ட வேண்டியுள்ளது.

கல்வியமைச்சு வெளியிடும் ஆவனங்களிலே "கல்வி மொழி", "முதலாம் மொழி" என்ற தொடர்களே பயன் படுத்தப்படுகின்றன. இந்தத் தொடர்கள் தாய் மொழி

என்பதற்கு எவ்வகையிலும் ஈடாக மாட்டா. தமிழ்ப்பிள்ளைகளையும், முஸ்லிம் பிள்ளைகளையும் அவர்கள் தாய்மொழி இல்லாத வேற்று மொழிகளிலே கல்வி கற்பதற்குத் தூண்டு தல்லிக்கும் நடவடிக்கையாகவும் அவை அமைந்துள்ளன.

சிந்தனையும் மொழியும் ஒன்றையொன்று விட்டுப் பிரியாத நிலையில் உள்ளமையால் கல்வி மொழி தாய் மொழியாகவே இருக்க வேண்டுமென்பதை அழுத்திக் கூற வேண்டியுள்ளது. உளவியலடிப்படையில் ஒரு மாணவனது ஆளுமை வெளிப்பாட்டுக்குரிய கருவியாகத் தாய்மொழியே மிக்க வலிமையுடன் செயற்படுகின்றது. மனித வளர்ச்சிக்குரிய காரணியாகவும் தாய்மொழி குறிப்பிடப்படுகிறது.[17]

தாய்மொழியின் முக்கியத்துவம் கல்வியிற் பல கோணங்களிலே வற்புறுத்தப்பட முடியுமாயினும், இலங்கையின் கல்வி ஆவணங்கள் அதனை சரிவரப் பயன்படுத்தாது வறிதாகியுள்ளமை குறிப்பிட வேண்டியுள்ளது.

1973 ம் ஆண்டிலே தமிழ் மாணவர்களின் உயர் கல்வி வாய்ப்புகளை கட்டுப்படுத்தும் ஒரு நடவடிக்கையை இடதுசாரி ஐக்கிய முன்னணி ஆட்சியில் இருந்தோர் மேற்கொண்டனர். தரப்படுத்தல் என்ற ஒவ்வாத நிகழ்ச்சி கல்விக்கு வந்தது. வரலாற்றுக் காரணங்களினால் ஆரம்பம், இடைநிலைக் கல்வியமைப்புக்கள் யாழ்ப்பாண மாவட்டத்தில் நன்கு ஒழுங்கமைக்கப்பட்டிருந்தமையால் பல்கலைக் கழகங்களிலே சிறப்பாக விஞ்ஞானத்துறைகளில் மாணவர்களின் நுழைவு ஓரளவு பாராட்டத்தக்கதாக அமைந்தது. இடைநிலைக் கல்வியின் விரிவு இலங்கையடங்கிலும் ஏற்பட்ட வேளை அந்த விரிவை ஈடுசெய்யும் வகையிலே உயர் கல்வி விரிவாக்கத்திலே கூடிய செயலூக்கம் காட்டாது, மாவட்டங்களில் குடித்தொகைக்கு ஏற்ப நுழைவைக் கட்டுப்படுத்த முயன்றமை தமிழ் மாணவர்களைப் பெருமளவு பாதித்தது.

1969ம் ஆண்டில் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானத்துறை சார்ந்த புலங்களில் தமிழ் மாணவர்கள் 27.5 சதவீதம் வரையிலே இருந்தார்கள். நுழைவுக் கட்டுப்பாடுகளுக்குப் பின்னர் 1974 ம் ஆண்டில் அவர்கள் இடம் பெறல் 7 சத வீதமாகவே அமைந்தது. 18

மாவட்ட அடிப்படையிற் கொழும்பு மாவட்ட மாண வர்கள் பாரிய தாக்கத்தை அடைந்தனர். ஆகவே சிங்கள மாணவர்களும் பாதிக்கப்பட்டனர் என்று முன்வைக்கப் படும் ஒரு கருத்தும் விமர்சனத்துக்குரியது. மொத்தமாக பல்கலைக்கழகத்துக்குச் செல்லும் சிங்கள மாணவர்களின் எண்ணிக்கையிலே அதிகரிப்பு ஏற்பட்டமையை இங்கு தொடர்பு படுத்த வேண்டியுள்ளது.

இவ்வாறான தெரிவுமுறை, மன்னார், வவுனியா, முல் லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை போன்ற மாவட்டங்களில் வாழும் மாணவர்க்கு அனுகூல மாக அமைந்ததென்று கூறினாலும். பல்கலைக்கழகங்களில் மொத்தமாக இடம் பெற்ற தமிழ் மாணவர்களின் எண் ணிக்கை வீழ்ச்சியடைந்தது, சிங்களவர், தமிழர் என்ற வேறுபாடின்றி அனைத்து மாணவர்க்கும் சம வாய்ப்பை ஏற்படுத்தியிருப்பின் சிக்கலை எளிதாக்கி இருக்கலாம்.

இக்கால கட்டத்தில் மூன்றும்நிலைக் கல்வி நிறுவன நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. அழகியற் கல்வி நிறுவனம் 1974 ஆம் ஆண்டிலும், ஆயுர்வேதக் கல்வி நிறு வனம் 1975ஆம் ஆண்டிலும், பௌத்த கல்விக்குரிய பட் டப்பின் படிப்பு நிறுவனம் 1976ஆம் ஆண்டிலும், தொழி லாளர் கல்வி நிறுவனம் 1976ஆம் ஆண்டிலும் ஏற்படுத் தப்பட்டன. முன்னேற்றம் வாய்ந்த கல்வி நடவடிக்கை களாக அவை அமைந்த பொழுதிலும் அவற்றிலே தமிழ் மொழி மூல மாணவர்கள் கற்பதற்குரிய வாய்ப்புகள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தன.

ஆயினும் 1974ஆம் ஆண்டில் இலங்கைப் பல்கலைக் கழகத்தின் யாழ்ப்பாண வளாகம் நிறுவப்பெற்றமை நீண்ட

காலமாகத் தமிழ் மக்கள் எதிர்பார்த்து நின்ற உயர் கல்வித் தேவையை நிறைவுபடுத்தும் வகையிலே அமைந்ததாயினும் பல்கலைக்கழக நுழைவிலே நிகழ்ந்த வேறுபடுத்தல் முறைமை தொடர்ந்தும் நெருக்கடிகளை உருவாக்கிற்று.

1960ஆம் ஆண்டில் திரு. சு. நடேசன் அவர்கள் ஆரம்பித்த இசைக் கல்லூரியை 1974 ஆம் ஆண்டில் கல்வி அமைச்சு கையேற்று அதற்கு இராமநாதன் நுண்கலைக் கல்லூரி என்ற பெயரைச் சூட்டித் தொடர்ந்து இயங்கச் செய்து வந்தது. 1975 ஆம் ஆண்டில் இக்கல்லூரி இலங்கைப் பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாண வளாகத்தாற் பொறுப்பேற்கப்பட்டது

1979ஆம் ஆண்டு தொடக்கம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் உயர் கல்வியமைச்சின் கீழ் இயங்கும் தன்னுரிமைக்கமுள்ள ஒரு பல்கலைக்கழகமாக வளர்ச்சி பெற்றது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தோற்றமும் வளர்ச்சியும் தமிழர்களது கலை, பண்பாடு, கல்வி, புவியியல், வரலாறு பொருளியல் போன்ற துறைகளிலே விரிவான ஆய்வுகளை மேற்கொள்ளும் வாய்ப்புகளை ஏற்படுத்தின. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான, மருத்துவ பீடங்கள் இப் பிரதேசத்துக்குரிய சிறப்பான பிரச்சினைகளைத் தமது ஆய்வுகளுக்குரிய கருப்பொருளாகக் கொண்டு வருகின்றன. தமிழ் மக்களது அறிவுப் பெருக்க முயற்சியில் இப்பணிகள் ஒரு வகையிலே காலத்தின் தேவையை நிறைவு செய்து வருகின்றன என்று கூறமுடியும்.

சிங்கள மொழி வாயிலாகக் கற்போர்க்கும், தமிழ் மொழி வாயிலாக கற்போர்க்கும் ஒரே பொதுவான கலைத் திட்டம் பாடசாலைகளிலும், பல்கலைக்கழகத்திலும், செயற்பட்டு வந்தாலும் பாட நூலாக்கத்திலும், பாட நூல் வழங்கலிலும் மொழி அடைப்படையில் வேறுபாடுள்க காணப்பட்டமையைச் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

1973ஆம் ஆண்டுக்கும் 1977 ஆம் ஆண்டுக்குமிடையே உயர்கல்வி நூலாக்கத்துக்குரிய திட்டமிடலிற் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் காணப்பட்டன. 19

**புதிய பதிப்புகள்**

| வருடம் | மொழி | நூலாக்கத் தலைப்புகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1973 | சிங்களம் | 96 |
| | தமிழ் | 50 |
| 1974 | சிங்களம் | 46 |
| | தமிழ் | 30 |
| 1975 | சிங்களம் | 40 |
| | தமிழ் | 23 |
| 1976 | சிங்களம் | 40 |
| | தமிழ் | 23 |

புதிய பதிப்பு நூல்களைப் பொறுத்தவரை பொதுவாக சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் படிப்படியான வீழ்ச்சி காணப்படுதலையும் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

இக்கால கட்டத்தில் இலங்கையின் பொருளாதாரத்தை மறுசீரமைக்கும் முயற்சிகளும், குடியேற்ற வாதப் பண்புகளிலிருந்து பொருளாதார நடவடிக்கைகளை மீட்டெடுக்கும் செயற்பாடுகளும் விரிவடையும் என எதிர்பார்க்கப்பட்ட பொழுதிலும் வரையறுக்கப்பட்ட தேசியவாதத்தின் வேர்களில் அவர்களது இயக்கங்கள் தொடர்புபட்டு நின்றமையைப் பின்வரும் கல்வி நிகழ்ச்சிகள் புலப்படுத்தின.

(அ) தமிழ் மக்களின் கல்வி மொழி தாய்மொழியே என்ற உறுதி வழங்கப்படாமை.

(ஆ) பெருந்தோட்டப் பாடசாலைகள் தேசியமயமாக்கப் படாமையும், இலங்கையின் பொதுவான கலைத் திட்டம் அங்கு செயற்படுத்தப்படாமையும்,

(இ) பல்கலைக்கழக நுழைவிலே தமிழ் மாணவர்களுக்குப் பாதகமான நிலைமைகளை உருவாக்கியமை.

(ஈ) தமிழ்மொழி மூல ஆசிரியர் கல்லூரிகள் மூடப் பட்டமை.

(உ) தமிழ் ஆசிரியர்களுக்குத் தொடர்ந்தும் தமிழ் அல் லாத மொழிகளில் சுற்றறிக்கைகள் அனுப்பப் பட்டமை.

(ஊ) தமிழ் மாணவர்க்குரிய தொழில் நுட்பக் கல்வி விரிவாக்கத்திற் போதிய கவனம் செலுத்தாமை.

இடதுசாரி ஐக்கிய முன்னணியினரின் ஆட்சிக் காலத் தின் பிற்கூற்றில் அவற்றிடையே நிகழ்ந்த கருத்து முரண் பாடுகள் ஆய்வாளர்களின் கவனத்தை ஈர்த்தன. இலங்கை அரசியலிற் பழைய இடதுசாரிகளின் வீழ்ச்சி குறிப்பிடத் தகக ஒரு காரணியாக விளங்குகின்றதென்று சுட்டிக்காட் டப்படுதலும் நோக்குதற்குரிய கருத்தாகவுள்ளது.20

குடியேற்ற வாதம் இந்நாட்டு இனக்குழுக்களுக்கிடையே வளர்த்தெடுத்த பகைமைவுணர்வுகளை வேரோடு அகழ்ந் தெடுப்பதற்குரிய கல்விச் செயற்பாடுகளை இடதுசாரி ஐக் கிய முன்னணியினர் வளர்க்கத் தவறியமை விமர்சிக்கப்பட வேண்டிய நிகழ்ச்சியாகும்.

கல்விகற்ற ஒரு சிறிய உயர்ந்தோர் குழாத்தினரைத் தவிர, வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழுகின்ற பெரும் பான்மையான தமிழ் மக்கள் வறிய விவசாயிகளாகவும். குத்தகை நிலத்தில் வாழ்வோராயும், தொழிலாளர்களாக வும், பொருளாதார சமூக அடிப்படையில் பெரும்பான்மை யான சிங்களவர்களோடு பெருமளவில் ஒத்த நிலையினராக வும் காணப்படுகின்றனர் என்ற கருத்து ஆய்வாளர்களி னுற் குறிப்பிடப்படுகின்றது.

அத்தகைய ஒரு சாதகமான நிலைமையை இடதுசாரி இயக்கங்கள் தமக்குரிய கல்வி வேலைத் திட்டங்களால் அணுகத் தவறியமை மேலும் ஆய்வுக்குரியது.

**பிரத்தியேகக் கல்வி நிலையங்களின் வளர்ச்சி**

1970 ம் ஆண்டைத் தொடர்ந்து இந்நாட்டின் கைத் தொழில் வர்த்தகத் துறைகளிலே தனியார் துறைகளுக்குக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. தனியார் துறைகளை அரசு கையேற்கும் நடவடிக்கைகள் முன்னேற்றம் பெறத் தொடங்கின. ஆனால் கல்வித் துறையைப் பொறுத்த வரை அதற்கு முரண்பாடான நிகழ்ச்சிகள் காணப்பட்டன. பிரத்தியேகக் கல்வியை வழங்கும் தனியார் நிலையங்கள் இக்காலப்பகுதியில் வேகமாக வளர்ச்சியுற்றன. அவற்றின் வளர்ச்சியை இரண்டு பிரிவுகளாகப் பகுத்தாராயலாம்.

(அ) பாலர் பள்ளிகள் அல்லது முன்பள்ளிகள்
(ஆ) பாடசாலைப் பாடங்களை மீளக் கற்பிக்கும் பிரத்தியேகக் கல்வி நிலையங்கள்.

தனியாரால் நடத்தப்படும் பாலர் பள்ளிகள் விரைந்து வளர்ச்சி கொள்வதற்கு 1972 ம் ஆண்டின் கலைத்திட்டச் சீர்திருத்தம் தூண்டுகோலாகியது. பிள்ளைப் பாடசாலைகளுக்குச் சேர்க்கும் வயதெல்லையை புதிய கல்வி ஏற்பாடு ஐந்திலிருந்து ஆறாக உயர்த்தியது.

அந்த நடவடிக்கையை மேற்கொண்ட கல்வியமைச்சு, பாலர் கல்விக்குரிய தனது பொறுப்பைத் தட்டிக் கழித்தது. "முன்பள்ளிக் கூடக் கல்வி குழந்தைகளின் ஆளுமைக்கு வித்திடும் கல்வியாகும். கல்வியிற் சமத்துவம், கல்வியிற் சம சந்தர்ப்பம் என்னும் கொள்கையை ஏற்கும் நாம் இம் முக்கியமான கல்வி நிலையினைத் தனியார் துறையினரிடம் ஒப்படைக்க முயல்வது கல்வி, சமூக, உளவியல் மனித அநீதி என்றே கொள்ள வேண்டும்." 22

இவ்வாறான விமர்சனங்களின் மத்தியிலும் கல்வி அமைச்சு இந்தப் பொறுப்பைத் தனக்குரியதாக்காது, வேறு நிறுவனங்களிடம் சுமத்தியமையால் முன்பள்ளிக் கல்வியை வழங்கும் தனியார் நிறுவனங்கள் வளரத் தொடங்கின.

கல்வியை ஒரு மூலதனமாகக் கருதும் உணர்வு மத்திய தர வகுப்புத் தமிழ் மக்களிடையே காணப்பெற்றமையால், முன்பள்ளிகளைத் திறக்கும் ஊக்கம் அவர்களிடையே விசை கொண்டது.

பிரித்தானிய முன்பள்ளி மாதிரியை ஆதாரமாகக் கொண்டு யாழ். மத்திய கல்லூரியின் புகழ்பூத்த அதிபர்களுள் ஒருவராக விளங்கிய கலாநிதி டி. ரி. நைல்ஸ் அவர்கள் 1955ஆம் ஆண்டில் வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் இல்லத்திலே யாழ். மாவட்டத்தின் நவீன முறைப் பாங்கான முதலாவது முன்பள்ளியை நிறுவினர்.[23]

அதனை முன் மாதிரியாகக் கொண்டு தமிழ் குழந்தைகளுக்குரிய முன்பள்ளிகள் அவ்வப்போது திறக்கப்பட்டதாயினும், 1972ஆம் ஆண்டுக்குப் பின்னர் அவ்வாறான நடவடிக்கைகள் மேலும் விரிவடையத் தொடங்கின. அதே ஆண்டு மேலும் பல நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

கலாநிதி டி. ரி. நைல்ஸ் அவர்களால் துவக்கப்பெற்று சென். பீற்றஸ் தேவாலய முகாமையின் கீழ் இயங்கிவரும் முன்பள்ளிச் செயற்றிட்டம், முன்பள்ளி ஆசிரியர்க்கான பயிற்சி நெறியை ஆரம்பித்தது. தமிழ் மொழி மூலமாக அங்கு நிகழ்ந்த பயிற்சியிலே பங்கு கொண்ட ஆசிரியர்கள் தத்தம் கிராமங்களிலே முன்பள்ளிகளை நிறுவினர். ஆயினும் இந்த ஒழுங்கமைப்பு அனைத்துக் குழந்தைகளுக்கும் கிடைத்ததென்று கூறமுடியாது.

இந்நிலையில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு வழங்கப்பெற்ற கல்வி காரணமாகக் குழந்தைகளுக்குரிய கற்பித்தலில் வினைத்திறன் ஏற்படலாயிற்று, முன்பள்ளி ஆசிரியர்களுக்குரிய கலைத்திட்டம் கல்வியியற் கோட்பாடுகள், குழந்தை உளவியல், கற்பித்தயல், குழந்தைகளின் நலவியல், சித்திரம், கைத்திறன், இசைக்கல்வி முதலியவற்றைக் கொண்டிருந்தது. ஆசிரியர் கல்வியிலீடுபடுவோர் குழந்தைகளுக்கான பாடல்கள், கதைகள், சித்திரங்கள் கற்பித்தல் உபகரணங்கள் முதலியவற்றைச் சேகரிக்கும் முயற்சியிலும்

ஈடுபடுத்தப்பட்டார்கள். இவற்றுடன் தனியாள் ஆய்வு உட்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் எழுதுதல், ஆங்கில இசைப் பயிற்சி முதலியனவும் அவர்களுக்கு வழங்கப் பெற்றன.

பாடசாலைகளிற் கற்பிக்கும் பாடங்களை மீளவும் கற்பித்தல் செய்யும் நடவடிக்கைகள் வீடுகளில் பின்பற்றப்படல் எமது கல்விப் பண்பாடுகளில் ஒன்ருக விளங்கி வருகின்றது. வீடுகளிற் கற்பித்தற் பணிகளைச் செய்ய முடியாத பெற்ருேர்கள் தமது பிள்ளைகளை அண்டை அயலிலுள்ள ஆசிரியர்களது வீட்டுக்கோ அல்லது படித்தவர்கள் வீடுகளுக்கோ அனுப்பி வைக்கும் மரபும் சில கிராமங்களில் காணப்பட்டது. இத்தகைய சேவைகளுக்கு எதுவித கட்டணமும் அறவிடப்படவில்லை. ஆயினும் அவ்வாறு இலவச சேவையை வழங்கிய ஆசிரியர்களுக்குச் சமுதாயத்திலே கௌரவமும் மதிப்பும் இருந்தன. சில தொண்டர் நிறுவனங்களும் ''இராப் பாடசாலைகள்'' என்ற அமைப்பினை நிறுவி, கிராமங்கள் சிலவற்றிலே இலவச மீட்டல் வகுப்புக்களை மேற்கொண்டு வந்தன.

பொதுக்கல்வியினுடைய விரிவாக்கமும், தீவிர போட்டி நிலைமைகளும் வளர்ச்சியுற, முன்னர் இலவசமாக விளங்கிய மீட்டற் கல்விச் சேவை கட்டணம் அறவிடப்படும் சேவையாக மாறியது.

கல்வியிற் கூர்ப்படைந்து சென்ற போட்டிகளின் மத்தியிலே மாணவர்கள் திறமைச் சித்திகளைப் பெறுவதற்கு மேலதிக நேரம் கற்கவும், மீட்டல் செய்யவும், வேண்டிய தவிர்க்கமுடியாத நிலை உருவாக்கப்பட்டது. மாணவர்கள் எவற்றைக் கற்றறிந்துள்ளனர் என்பதை விடுத்து, எவ்வாறு பரீட்சைகளுக்குரிய தயாரிப்புகளை மேற்கொண்டனர் என்பதே ஒப்பீட்டளவில் முக்கியத்துவம் பெறும் நடப்பியலாகியது.

1970 ஆம் ஆண்டுக்குப் பின்னர் க. பொ. த. சாதாரணம், உயர்தரம் ஆகிய பரீட்சைகளில் ஒருவர் பெற்ற

திறமைச்சித்திகளின் அடிப்படையிலே அரச எழுதுவினைஞர் சேவைக்குரிய ஆட்சேர்ப்பு இடம் பெறத் தொடங்கியமை, பரீட்சை நிலைப்பட்ட போட்டிகளை மேலும் ஊக்குவித்தது.

1972 ம் ஆண்டிற் புதிய கலைத்திட்ட மாற்றங்கள் கொண்டுவரப்பட்ட வேளை ஒன்றிணைந்த முறையிலே கணிதம், விஞ்ஞானம், சமூகக் கல்வி, போன்ற பாடங்களைக் கற்பிப்பதற்குப் பாடசாலைகள் பலவற்றிலே போதிய ஆசிரியர்கள் இல்லாதிருந்தனர். அந்த இடை வெளியை நிரப்புவதற்கும் பிரத்தியேகக் கல்வி நிலையங்கள் வேண்டப்பட்டன- அந்நிலையிற் கிராமங்கள் பலவற்றிற் பாடசாலைகளுக்கு அண்மையாகவே பிரத்தியேகக் கல்வி நிலையங்கள் திறக்கப்பட்டன.

ஐந்தாம் வகுப்பில் இடம் பெற்ற புலமைப் பரிசிற் பரீட்சையும், தீவிர போட்டிக்குரியதாக வளர்ச்சி பெற, ஆரம்ப வகுப்புகளிலிருந்தே பிரத்தியேக போதனைகளைப் பெற வேண்டிய அமைப்பும் உருவாக்கப்பட்டது.

பரீட்சைக்குரிய வேகமான தயாரிப்பும், மாதிரி வினு விடைகள்; கடந்தகால வினுவிடைகள் என்பவற்றிலே துளையிட்டுப் பயிற்சிவழங்கலும், பரீட்சை வினுக்கள் பற்றிய யூக முறை சார்ந்த எதிர்வு கூறலும், பிரத்தியேக கல்வி நிலையங்களிலே சிறப்பிடம் பெறுகின்றன. பின்தங்கிய மாணவர் என்போருக்குரிய குறைநீக்கும் கற்பித்தல் என்பதிலும் பார்க்க, போட்டிப் பரீட்சைகளுக்குரிய தயாரிப்பு நிலைகளே பிரத்தியேக கல்வி நிலையங்களிலே இன்று விதந்து பின்பற்றப்படுகின்றன.

பிரத்தியேக கல்வி நிலையங்களின் வளர்ச்சி கல்வியை முற்றிலும் வர்த்தகப் பண்டகமாக்கிவிடும் நிலைக்கு அழுத்தங் கொடுக்க முயல்கின்றது. மாணவர்களிடமிருந்து பெறப்படும் பணமே அவற்றின் இயக்கத்துக்குரிய மூல ஊற்றுக விளங்குவதால். அதனைச் சுற்றியெழும் மனேபாவங்கள் மாணவர் மத்தியிலே ஒழுக்காற்றுப் பிரச்சினைகளையும் தோற்றுவிக்கக் கூடியதாக உள்ளது.

## 1977ஆம் ஆண்டுக்குப் பிற்பட்ட வளர்ச்சி

1977ஆம் ஆண்டைத் தொடர்ந்து கல்வித் துறையிலே பல்வேறு மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. தனியார் துறையினரை ஊக்குவித்தல், திறந்த பொருளாதார முறைமை, நாணயப் பெறுமதியிறக்கம் போன்ற பொருளாதார நடவடிக்கைகள் கல்வியிலே தாக்கங்களை ஏற்படுத்தத் தொடங்கின.

திறந்த பொருளாதார முறைமை மேலைப்புலப் பண்பாடுகளின் வடிவங்களாகிய சுற்றுலா, தொலைக்காட்சி, நுகர்ச்சிக்கோலங்கள், முதலியவற்றை வளர்க்கத் தொடங்கின. அவற்றின் பின்னணியிலே ஆங்கில மொழி மீண்டும் இலங்கையிலே செல்வாக்குப் பெறத் தொடங்கியது.

தனியார் கல்லூரிகளுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தை அரசாங்கம் மேற்கொண்டது. தனியார் மருத்துவக் கல்லூரி திறப்பதற்கும் அனுமதி வழங்கப்பட்டது. பல்கலைக்கழகங்கள் சுயாதீனமாக இயங்குவதற்கு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டது. கிழக்கு மாகாணத்தில் திறக்கப்பட்ட பல்கலைக்கழகக் கல்லூரியின் போதனு மொழி ஆங்கிலம் என முடிவு செய்யப்பட்டது.

1982 ம் ஆண்டின் பிற்கூற்றில் அரசாங்கம் மேற்கொண்ட கைத்தொழில் ஊக்குவிப்பு வலயத்தில் 25,000 பேருக்கு வேலை வாய்ப்புகள் கிடைக்கப் பெற்றதோடு மத்திய கிழக்கு எண்ணெய் வள நாடுகளில் 60,000 பேரும் வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொண்டமை சமுதாய நிலை சார்ந்த மேல்நோக்கிய அசைவுகளுக்கு அனுசரணையாயிற்று.24

இந்த நிகழ்ச்சிகள் சமுதாயத்தில் ஆங்கில மொழிக்குரிய மோகத்துக்கு மீள வலியுறுத்தல்களைக் கொடுத்தன.

தாராண்மையாக்கப்பட்ட பொருளாதார வளர்ச்சி, வெளியூர் வேலை வாய்ப்புக்கள், புதிது புதிதாக இறக்குமதி

செய்யப் பெற்ற வெளிநாட்டுப் பொருட்களைக் கொள்வனவு செய்யும் விருப்பும்' கொள்வனவுத் திறனும் வளர்த்தமை என்பவற்ருல் புதிய வியாபார முறைகளும் போட்டிகளும் வளரலாயின.

இந்தப் போட்டி முறைமைகளோடு இனத்துவ உணர்வுகளும் கலக்கப் பெற்றமை பல்வேறு விளைவுகளை உருவாக்கின.

தாராண்மையான பொருளாதார நடவடிக்கைகள் காரணமாகவும், தனியார் துறை ஊக்குவிப்பு முயற்சிகள் காரணமாகவும் மீண்டும் தனியார் கல்லூரிகளுக்குரிய செழிப்பு நிலை தோன்றியது. தனியார் கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு அரசாங்கம் வேதனம் வழங்கத் தொடங்கியது.

ஆபிரிக்க நாடுகளில் இலங்கையிலுள்ள பட்டதாரி ஆசிரியர்களுக்குரிய வேலை வாய்ப்புக்கள் அதிகரிக்கத் தொடங்கியமையாலும், உள்ளூரிலே காணப்பெற்ற அசாதாரண நிலைமைகளினுலும், அனுபவம் வாய்ந்த பட்டதாரி ஆசிரியர்கள் பலர் ஆபிரிக்க நாடுகளுக்குப் புலம் பெயரத் தொடங்கினர். அவற்றின் காரணமாக தமிழ்ப் பிரதேசங்களின் புகழ்பூத்த கல்லூரிகள் பாதிப்படைந்தன. யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியும் அத்தகைய தாக்கத்தையடைந்தமையை அவதானிக்க முடிகிறது.[25]

தேசிய வாதம் தீவிரமாக வளர்ச்சி பெறத் தொடங்க அவற்றின் தாக்கங்கள் தெளிவாகத் துலங்கின. 1958 ம் ஆண்டிலிருந்து இனத்துவ வன்முறைகள் வளர்ச்சியடைந்து 1983 ம் ஆண்டு மேலும் அமுக்கங்களை அடைந்த வேளை சிங்கள மொழி மூலமாகக் கல்வி கற்ற தமிழ்மக்களும் தென் பிரதேசங்களிலே நயமுடன் வாழ முடியாத நிலை தோன்றியது.[26]

இலங்கையின் அரசியல் பொருளாதாரம், சமூகம் ஆகிய துறைகளைச் சார்ந்த அரசாங்கத் தீர்மானம் மேற்

கொள்ளலில் இனத்துவ நிலைப்பட்ட அணுகுமுறைகள் மௌன வடிவிலே இருந்து வருதலை ஆய்வாளர் சுட்டிக் காட்டியுள்ளார்— 27

கல்வி விருத்தியிலே தமிழ் மக்கள் படிப்படியாக பின் தங்கி வருவதற்குரிய பன்முகப்பட்ட எடுத்துக்காட்டுக்களை இத்தொடர்பிலே குறித்துக் காட்டக் கூடியதாகவுள்ளது.

எழுத்தறிவு தொடர்பான புள்ளிவிபரங்களை ஆராயும் பொழுது தமிழ்மொழி பேசுவோர் பின்தங்கியுள்ளமை யைப் பின்வரும் புள்ளிவிபரங்கள் புலப்படுத்துகின்றன. 28

| | |
|---|---|
| சிங்களவர்கள் | – 88.4 |
| இலங்கைத் தமிழர் | – 86.6 |
| பெருந்தோட்டத் தமிழர் | – 66.9 |
| இலங்கை முஸ்லீம்கள் | – 79.3 |

முதனிலைப் பாடசாலைகளில் மாணவர்கள் சேரும் வீதங் களை ஓராண்டு இடைவெளியில் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுதும் பின்னடைவுகளைத் தெளிவாகக் காட்டலாம். பின்வரும் ஒப்பியல் நோக்கு அதனைத் தெரிவு படுத்து கின்றது. 29

| | 1979 | 1980 |
|---|---|---|
| சிங்களவர் | 86.9 | 95.7 |
| தமிழர் | 82.6 | 80.1 |
| முஸ்லீம்கள் | 78.0 | 74.4 |

பாடசாலையிலிருந்து இடைவிலகிச் செல்லும் மாண வர்கள் எண்ணிக்கையிலும் பிரதிகூலமான நிலைகள் காணப் படுகின்றன. பின்வரும் புள்ளிவிபரங்கள் ஐந்தாம் வகுப் பில் இடைவிலகலை மாவட்ட அடிப்படையிலே விளங்கு கின்றன. 30

| மாவட்டம் | இடைவிலகல் வீதம் |
| --- | --- |
| வவுனியா | 20.6 |
| மன்னர் | 20.5 |
| மட்டக்களப்பு | 20.5 |
| திருகோணமலை | 12.9 |
| யாழ்ப்பாணம் | 11.7 |
| கேகாலை | 8.4 |
| மாத்தறை | 7.2 |
| கொழும்பு | 5.3 |

மேலும் பெருந்தோட்டத்துறைத் தமிழர்களின் கல்வி விருத்தி மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கின்றது. இலங்கையின் குடித்தொகையில் பெருந்தோட்டத் துறைத் தமிழர்களின் வீதாசாரம் 9·3 ஆகும்.[31]

பெருந்தோட்டப் பாடசாலைகளும், தேசிய பாடசாலைகளும் கட்டமைப்புக்களில் வேறுபாடு கொண்டு காணப்படுகின்றன. தேசிய பாடசாலைகளிற் சாதாரணமாகக் காணப்படும் பிரார்த்தனைக்கூடம், நூல்நிலையம் ஆய்வுகூடம், விளையாட்டுத்திடல், அதிபர் அலுவலகம், முதலியவற்றைத் தோட்டப் பாடசாலைகளிற் காணல் அரிது.

அமைப்பியலைப் பொறுத்தவரை பெருந்தோட்டப் பாடசாலை ஓர் அறைப் பள்ளிக்கூடமாகவேயுள்ளது. தோட்டப் பாடசாலைகலைகளைப் படிப்படியாக அரசு பொறுப்பேற்று வந்துள்ள போது அவற்றுள் சில தற்காலிகமாகவும் சில நிரந்தரமாகவும் மூடப்பட்டு வந்துள்ளமையால் மலையகத் தொழிலாளர்களுக்குரிய கல்வி வாய்ப்புக்கள் நெருக்கிடைகளுக்கு உள்ளாகின்றன. 1983ம் ஆண்டு நிகழ்ந்த வன்செயல்களைத் தொடர்ந்து ஆசிரியர் இல்லாமை காரணமாகவும் பெருந்தோட்டச் சிறுர்களின் கல்வி பாதிக்கப்பட்டுள்ளது.

பெரும்பாலான பெருந்தோட்டப் பாடசாலைகள் ஐந்தாம் வகுப்பு வரை மட்டுமே காணப்படுவதால் ஐந்தாம்

வகுப்புக்கு மேற்பட்ட கல்விக்குரிய சம சந்தர்ப்பங்களை அங்குள்ள சிறுவர்கள் அனுபவிக்க முடியாதுள்ளது.32

பெருந்தோட்டங்களிற் பொதுவாகக் கல்வி வாய்ப்புக்கள் பின்தங்கிய நிலையிற் காணப்படும் வேளை அங்கு பெண் கல்வி வாய்புக்கள் மேலும் பின்தங்கியுள்ளன. பெண்களின் உடலுழைப்பு அவர்களின் உணவுத் தேவையினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாக விளங்குகின்றமையால் கல்வியைப் புறக்கணிக்க வேண்டி நேரிடுகின்றது.

இலங்கையிற் பெண்கல்வி வாய்ப்புக்கள் விரிவடைந்துள்ளன என்று கூறப்படும் வேளை இதுவரை தோட்டங்களிற் சாதாரண தொழிலாளர் நிலையிலுள்ள எந்தப் பெண்ணும் உயர்கல்வியைப் பெற்றிருக்கவில்லை என்பதை அனுதாபத்துடன் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

பெருந்தோட்டப் பகுதிகளில் உள்ள இருமொழிப் பாடசாலைகளில் பிற்பகலில் மாத்திரமே தமிழ்ப்பிரிவுகள் இயங்குகின்றன. இவற்றின் காரணமாக [illegible]லைத்திட்டச் செயலியக்கங்களிலும் அவை பின்தங்கி விடுகின்றன.

ஏகாதிபத்திய பொருளாதார நடவடிக்கைகளால் உருப்பெற்ற பெருந்தோட்டத்துறையின் செயற்பாடுகள் கல்வி ஒரு முதலீடாகும் என்ற பண்பாட்டைக் கட்டியெழுப்பவில்லை. கல்வி வழங்குதலும், கல்வி வாயிலாகத் தொழில் வாய்ப்புக்களை உருவாக்குதலும் அந்தப் பொருளாதார முறைமைக்கு வேண்டாப் பொருளாகவே இருந்தது. சுதந்திரத்தின் பின்னர் பல்லாண்டுகளாகியும் பெருந்தோட்டப் பொருளாதார அமைப்பு வடிவிலிருந்து மீண்டெழாத பண்பை அங்கு நிலவும் கல்வி வடிங்கள் தெளிவாகக் காட்டுகின்றன.

''இலங்கையின் கல்வி முகாமைத்துவ சீர்திருத்தங்கள் பெரும் பான்மைச் சமூகங்களின் ஆக்கிரமிப்புக்குள்ளாக்கப் படாதிருத்தல் வேண்டும். அதேவேளை வறிதாகிய நிலையிலுள்ள எந்தச் சமூகக் குழுக்களதும் அடிப்படைத் தேவை

களைப் பாதிக்காதவாறு இனத்துவ சிறுபான்மையினர் வேண்டி நிற்கும் சலுகைகளையும் தள்ளுபடி செய்தல் வேண்டும், ''33 கூறப்படுதல் இலங்கையின் கல்விச் சமத்துவத்தில் இடம்பெறும் குழப்பமான நிலைகளைப் புலப்படுத்துகின்றன.

தனியார் கல்லூரிகள், முதன்மைநிலையிலுள்ள கல்லூரிகள் முதலியவற்றைக் கொத்தணி அமைப்புக்களிலே உட்படுத்தி அவற்றின் வளங்களை ஏனைய பாடசாலைகளும் பகிர்ந்து அனுபவிக்கும் ஏற்பாடுகள் 1983ம்ஆண்டின் கல்வி வெள்ளை அறிக்கையிலே குறிப்பிடப்படவில்லை. தனியார் பாடசாலைகளும், ஒற்றை நிலைப்பாடசாலைகளும் தொடர்ந்தும் இயங்கும் வாய்ப்புத் தரப்பட்டுள்ளது. இந்நிலையிற் கல்வியிற் சமசந்தர்ப்பம் ஈட்டப்பட முடியுமா என்ற கேள்வி எழுகின்றது.

*1983* ஆம் ஆண்டின் வன்செயல்களைத் தொடர்ந்து, கல்வி மேலும் பாதிப்புக்குள்ளாகியது. பல பாடசாலைகள் மூடப்பட்டும் இயங்க முடியாத நிலையிலுமுள்ளன. இடம்பெயர்வதினாலும், அகதிகளாவதினாலும் கல்வி மேலும் பின்னடைகின்றது. இவை பற்றிய புள்ளி விபரங்கள் தொகுக்கப்படும் பொழுது, திட்டவட்டமான தகவல்களை முன்வைக்க முடியும். அண்மைக்கால நிகழ்ச்சிகளும், அவற்றின் தாக்கங்களும் தொகுக்கப்படல் வேண்டும்.

கல்விச் செயற்பாடுகள் வாயிலாகவும் இன்று பாதிப்புக்கள் எழுகின்றன, இலங்கை மாணவர்கள் அனைவரும் ஒரே பொதுப் பரீட்சைகளுக்குத் தயாரிக்கப்படும் நிலையில் தமிழ் மாணவர்களுக்குரிய பாடநூல்கள் உரியமுறையிலே வழங்கப்படாமை நமது சூழலிற் பெறப்படும் அனுபவங்களாக உள்ளன,

நல்லூர், கொழும்புத்துறை, திருநெல்வேலி முதலிய ஆசிரியர் கலாசாலைகள் மூடப்பட்டமையின் விளைவுகளை இன்று பாடசாலைகளிலே நேரடியாக அனுபவிக்கக் கூடியதாகவுள்ளது. ஆரம்பப்பாடசாலைகளுக்கு மிகப் பெருமளவிலான ஆசிரியர் பற்றாக்குறை எழுந்துள்ளது. ஆரம்ப நிலை

யில் உரிய முறையிற் கல்வி கட்டியெழுப்பப் படாவிடில் இடைநிலைக் கல்விநலிவடையும் சாத்தியக் கூறுகள் ஏற்படும்.

**மீண்டும் விருத்தி**

கல்வி தொடர்பான சிக்கல்கள் குழப்பங்கள் என்பவற்றிலிருந்தது பல்வேறு அனுபவங்களைப் பெற முடியும். சிக்கல்களிலும் குழப்பங்களிலும் இரட்டைத்தன்மைகள் இருப்பதைக் காணலாம். அதாவதுஆக்க பூர்வமான பண்புகளும் ஆக்கமற்ற பண்புகளும் அவற்றிடையே பொதிந்திருக்கும். இப் பண்புகளை முரண்பாடுகள் என்று குறிப்பிட முடியும். குறித்த முரண்பாடுகளைப் பிறப்பிக்கும் சூழ்நிலையினை தெளிவுற அறிந்து கொண்டு ஆக்கமற்ற எதிர்வலுக்களை ஆக்கமுள்ள நேர்வலுக்களாக மாற்றியமைக்க வேண்டும்.[34]

பெருக்கம் ஏற்பட்டு வருகின்ற வேளை அந்தப் பெருக்குக்குரியதர மேம்பாட்டை ஈட்டுவதற்குரிய நிதிவழங்கற்பற்றுக் குறை நிலவி வருகின்றன. இந்த நிலையானது வாய்ப்புக்கும் வாய்ப்பின்மைக்குமிடையே உள்ள இடைவெளியை விரிவாக்குகின்றது. அரசாங்கப் பாடசாலைகளில் 85 சதவீதமானவை மின்வசதிகள் அற்ற பின்தங்கிய நிலைமையில் இருந்தும் அதே வேளை நகரப் பாடசாலைகள் சிலவற்றிலே மின் கணணிகளைப் பெறத் தொடங்கியுள்ளமையும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

கல்வியமைச்சை நம்பியிராது தத்தமது சூழலிலுள்ள பாடசாலைகள் விருத்தி செய்தலும் தர உயர்வை மேம்படுத்தலுமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் சமுதாயநிலைப்பட்ட தொழிற்பாடுகள் மறுபுறம் வளரத் தொடங்கியுள்ளன இந் நடவடிக்கைகளைத் தமிழ் மக்கள் மேலும் முன்னெடுக்க வேண்டிய நிலையிலுள்ளனர்.

கல்விச் செயற்பாடுகள் சமூக இருப்பில் வேரோடி நிற்கும். சமூக இருப்பிலிருந்தே மனித உணர்வுகளும், மனச்சாட்சியும் மலர்கின்றன. மக்கள் எவ்வாறு சிந்திக்கின்றார்கள் என்பது, எத்தகைய கல்வியைப் பெற விழைகிறார்கள் என்பதும் அவர்கள் எந்த முறையிலே வாழ்கின்றார்கள் என்பதற்கு இசைவானதாகவே விளங்கும்.

வாழ்க்கை முறைகள் பல தரப்பட்டதும். சிக்கலானது மாகும். பொருளாதாரம், அரசியல், சட்டம், கல்வி என்ற பல்வேறு பண்புக் கூறுகள் ஒன்றின் மீது மற்றையது ஊடாட்டங் கொள்ளும் சிக்கலான பண்பினை வாழ்க்கை முறைகள் கொண்டுள்ளன. இவ்வாறான தொடர்புகளின் மத்தியிலே கல்விக் கருத்துக்கள் பொது மக்களைக் கவரும் பொழுது அவை பொருளாதார வலுவைப் பெறுகின்றன.

வரலாற்று நிகழ்ச்சிகளைப் பொருளாதாரப் பண்புகளுடன் மட்டும் கட்டுப்படுத்தி விட முடியாது, பொருளாதாரம் உள்ளிட்ட அனைத்துப் பண்புகளுடனும் தொடர்பு படுத்திப் பார்த்தல் வேண்டும். அவ்வாறு நோக்குதல் கல்விச் செயற்பாடுகள் பற்றிய தெளிவான விளக்கங்களைத் தரும். அரசாங்க நிதி ஒதுக்கீடுகளைப் பொறுத்தவரை இலங்கையின் வடகிழக்குப் பகுதிகள் புறக்கணிக்கப்பட்ட நிலையினை வண. திஸ்ஸ பாலசூரிய போன்றோர் தமது ஆய்வுகளிலே சுட்டிக் காட்டியுள்ளனர்.35 தமிழ் மக்கள் கல்வி தொடர்பான தமது சுய முயற்சிகளை மேலும் அபிவிருத்தி செய்ய வேண்டிய நிலைக்கு வருவிக்கப்பட்டுள்ளனர்.

இச்சந்தர்ப்பத்தில் மேல்வரும் துறைகளில் தமிழ்மக்களிடையே நிலவும் பின்னடைவுகளைத் தொகுத்துக் குறிப்பிட வேண்டியுள்ளது.

(அ) பாடசாலை செல்லாத சிறுவர்களின் எண்ணிக்கையும், இடைநிலைக் கல்வியை முடிப்பதற்கு முன்னரே நழுவிவிடும் மாணவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றன.

(ஆ) கலைத்திட்டத்தில் மாணவர் முழுமையாகப் பங்கு பற்ற முடியாத அமைப்பியல் சார்ந்த நெருக்கிடைகள் காணப்படுகின்றன.

(இ) பொறியியல், மருத்துவம், கணக்காய்வு ஆகிய வாண்மைகளுக்குரிய போட்டியும், கேள்வியும்,

வீக்கமடைவதாற் கல்வியிலே தொடர்ந்தும் சம நிலைத் தளம்பல் காணப்படுகின்றது.

(ஈ) சமநிலையான கல்வி முன்னேற்றத்தை ஈட்ட வல்ல சமூக விஞ்ஞானத் துறைகள், இயற்கை விஞ்ஞானத் துறைகள், அழகியல் துறைகள் முதலிய வற்றிலே பின்னடைவு காணப்படுகின்றது.

(உ) உயர்கல்வி, தொழில் நுட்பக் கல்வி ஆகியவற்றின் வாய்ப்புக்களில் எதிர்பார்த்த விரிவு நிகழவில்லை. பாடசாலைக் கல்விக்கும் மூன்றும் நிலைக் கல்விக் கும் மிடையே பாரிய இடைவெளி காணப்படு கின்றது.

(ஊ) பயிர்வளம், கடல்வளம் ஆகிய இரு பிரதான துறைகளிலும் உற்பத்தி சார்ந்த வினைத்திறன்களை ஏற்படுத்துவதற்குரிய கல்வி சார்ந்த இணைப்பு முழு வீச்சில் நிகழவில்லை.

(எ) அனைத்து மக்களதும் ஆளுமை விருத்திக்குரிய அழ கியற் கல்வித் திட்டங்கள் முழுமையாக ஒருங்கி ணைக்கப்படவில்லை.

(ஏ) முன்பள்ளிக் கல்வி, தொழிலாளர் கலவி, பிரத்தி யேகக் கல்வி நிலையங்கள் ஆகியவற்றைத் தனித் தனியே ஒருங்கிணைக்கும் வலிதான திட்டங்கள் ஆக்கங்கொள்ளவில்லை.

(ஐ) மாணவரிடத்தும், பொதுமக்களிடத்தும் பொது வாசிப்புத் திறனும், ஆழ்ந்த வாசிப்புத் திறனும், சிறந்த இரசனையும், முழுவீச்சில் நிகழவில்லை.

மேற்கூறிய பின்னடைவுகள் காணப்பட்டாலும் அவற் றினுள்ளே கல்வியில் நேர் விசைகளைப் பிறப்பிப்பதற்கான வலுவும் வளர்ந்து வந்துள்ள அனுபவத்தைக் குறிப்பிட வேண்டியுள்ளது. இந்நிலையில் இளைஞர்களின் எழுச்சிக்கும் கல்விச் செயற்பாடுகளுக்குமிடையிலான தொடர்புகள் விரி வாக ஆராயப்படும் பொழுது, மேலும் ஆக்கபூர்வமான கருத்துக்களை முன்மொழியலாம்.

கல்வி முதிர்ச்சி அடைவதில்லை, அது எப்பொழுதும் இளமையாகவே இருக்கும்.

# References

1. Swarna Jayaweera, "Education", **Modern Sri Lanka: A Society in Transition** Tissa Fernando and Robert N. Kearney (Ed) Maxwell School of Citizenship and public affairs, Syracuse University 1979, p.132

2. **Hansard**, official repot of the Proceedings of the State Council **24**th August 1945, p.918

3. J. E. Jeyasuriya, **Education in Ceylon before and after independence,** A. E. Publishers, Colombo, 1969, p. 200

4. Swarna Jayaweera, **Op. Cit.**, p. 139

5. **The Betrayal of Buddhism,** Report of the Unofficial Buddist Committee of inquiry, Balangoda, 1955 p. 27

6. A. J. Wilson, **Politics in Sri Lanka 1947 = 1973**, The Macmillan Press Ltd., London, 1974, p. 16

7. **Act No; 5 of 1960** and **Act No 8 of 1961**

8. **Hansard,** Senate, **21-12-**1966, Col .3233

9. Ministry of plan Implementation. **Statistical Abstract of the Democratic Socialist Republic of Sri Lanka 1982** Govt. Publications Bureau, *1982*, p.*311*.

11. **Sessional Paper XVII** of *1962*, Final Report of the National Education Commission, *1962*, p.*20*.

11. J. E. Jayasuriya, **op. cit.** p. *132*.

12. W. M. K. Wijetunga, **Sri Lanka in transition**, Colombo, *1974*, p. *92*

13. **Ibid;** p. *94*

14. Ministry of Education **1972 Curricular reforms**, p. *3*

15. **Ibid;** p. *14*

16. Ministry of Education, **Medium term plan for the development of Education**, *1973-77*, p. *9*

17. Vallipuram Arumugam, **A Comparative study of Language Policies and Problems in Ceylon and India since Independence**, A Dissertation submitted for the Degree of Master of Philosophy in Education (Unpublished) Institute of Education, University of London, *1973*, p. *15*

18. J.E.Jayasuriya, **Education in the Third World**, Somiya Publications PVT.Ltd. , New Delhi, *1981*, p .*97*

19. **Medium Term Plan for the Development of Education** 1973-77, op.cit. p. *210*

20. K. M. De Silva, **A History of Sri Lanka**, Oxford University Press Bombay, 1981, p.563.

21. P.Saran, **Government and Politics of Sri anka**, Metropolitan Book Co.Pvt Ltd., New Delhi, *1982*, p.*115*.

22. p.Chandrasegaram, ''Principles of Infant Education'' **Scitific Approach to Pre-School Education A/L** Pre=School Educational Council, Jaffna, *1986*, p. *143*.

23. S.Jayarasah, Enriching the Pre School Curriculum, **Ibid;** p. *120.*

24. C. R. de Silva, "Plebiscitary Democracy or Creeping Authoritarianism" , **Sri Lanka in change and crisis** James Manor (Ed.) Croom Helm, London, *1984*,p.*40*

25. Jaffna Hindu College, **The Young Hindu**, *1985*, p.*134*

26. K. Sivathamby, **Tamilian Nationalism and Social Conflicts**, Handy Perinpanayagam Commemoration Society, Jaffna, *1986*, p.*8*

27. Edward Appathurai, "Communal Polities and National Integration in Sri Lanka" , **National Unity the South Asian Experience**, Milton Israel (Ed) Promilla and Co. ,New Delhi, *1983*, p.*212*

28. Ministry of Plan imPlementation, **Socio-Economic Indicators of Sri Lanka**, Colombo, *1983*. p.*207*

29. **Ibid**. p. *211*

30, W. Diyasena, "The Formal School Education System of Sri Lanka" , **University Education and Graduate Employment in Sri Lanka**, Marga Institute, Colombo *1983*, p.*100*

31. **Ibid.** p.*106*

32. **Socio-Economic Indicators of Sri Lanka**, op. cit., p.*311*

33. Neil Fernando, Educational Management reforms in Sri Lanka, **Bulletin of the UNESCO Regional office for Education in Asia and the Pacific**, Bangkok *1986*, p. 200

34. C.R.De Silva and D. De. Silva, **Education in Sri Lanka 1948 - 1985**. The Asia Foundation, Colombo 1985, p. A40

35. Tissa Balasuriya, "Our crisis of National Unity" **Race Relations in Sri Lanka**, Centre for Society Religion, and Colombo, 1978, p. 154


———————